**13.03.2020**

**பத்திரிக்கை செய்தி**

**மெட்ரோ இரயில் நிலையங்களில் வருகின்ற 15.03.2020 (ஞாயிற்றுக்கிழமை) அன்று இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் 'ஸ்ரீ சத்ய சாய் சேவா அமைப்புடன்' இணைந்து மெட்ரோ பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் வருகின்ற 15.03.2020 (ஞாயிற்றுக்கிழமை) அன்று மாலை 4:00 மணி முதல் இரவு 7:30 மணி வரை திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெறுகிறது.

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாமில்

இரத்தத்தின் வகை கண்டறிதல்,
சர்க்கரை சோதனை,
எடை சோதனை,
இரத்த அழுத்தம் சோதனை,
கண் பரிசோதனை.
மற்றும் ஆலோசனைகள் போன்றவை வழங்கப்படும்.

மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள் இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாமை பயன்படுத்தி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் 'அகரம் அறக்கட்டளையுடன்' இணைந்து வருகின்ற 15.03.2020 (ஞாயிற்றுக்கிழமை) அன்று இரவு 7:00 மணி முதல் 7:50 மணி வரை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் பிளாஸ்டிக் தவிர்ப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, வருகின்ற 15.03.2020 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6:30 மணி முதல் இரவு 8:30 மணி வரை - பரங்கிமலை மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) "ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை", இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

சென்னை மாநகரில் வசிக்கும் மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள், மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறும் இசை மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை கண்டுகளித்து சிறப்பிக்குமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.